# உரிமைகள் காப்புறுதி நிதியம்

# செயலாற்றுகை அறிக்கை மற்றும் கணக்குகள் - 2025



## பதிவாளர் நாயகம் திணைக்களம்

# உள்ளடக்கம்

**அத்தியாயம் 01 – நிதியத்தின் விவரத்திரட்டு/ நடைமுறைப்படுத்துவதில் சாராம்சம்**

1.1 அறிமுகம்

1.2 நிதியம் நிறுவப்பட்டுள்ள சட்ட சட்டகம் (சட்டம், நிதிய உறுதிகள் மற்றும் வேறு)

1.3 நிதியத்தின் குறிக்கோள்கள்

1.4 நிதியத்தின் நோக்கு, பணிக்கூற்று, நோக்கங்கள்

1.5 பிரதான அலுவல்கள்

1.6 தாபன கட்டமைப்பு

1.7 வெளிநாட்டு உதவிகளை பெறும் கருத்திட்டங்களின் தகவல்கள்

அ) திட்டத்தின் பெயர்

ஆ) பங்களிப்பு நிறுவனங்கள்

இ) திட்டத்தின் திட்டமிடப்பட்டுள்ள செலவு

ஈ) திட்டத்தின் கால வரையரை

**அத்தியாயம் 02 – முன்னேற்றம் மற்றும் முன்நோக்கு**

விஷேடம், வெற்றிகள், சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகளை சுருக்கமாக விவரிக்குக.

**அத்தியாயம் 03 – வருடத்தின் மொத்த நிதி செயலாற்றுகை**

3.1 நிதி அறிக்கைகள்

3.1.1 நிதி நிலமை பற்றிய பிரகடணம்

3.1.2 நிதிசெயலாற்றுகை பிரகடணம்

3.1.3 பண புழக்க பிரகடணம்

3.1.4 கொள்ளல் மற்றும் கொடுத்தல் கணக்கு

3.1.5 நிகர மதிப்பு / நிறை மாற்றத்தின் அறிக்கை

3.1.6 இருப்பு சரிபார்த்தல்

3.1.7 நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள்

3.2 நிதி ஒதுக்கீடுகள் பயன்படுத்தல் செயலாற்றுகை

3.3 நன்கொடைகள் மற்றும் ஏனைய பெறுகைகள் பற்றிய செயலாற்றுகை

3.4 நிதியல்லா சொத்துக்கள் பற்றிய அறிக்கை

3.5 கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

**அத்தியாயம் 04 – செயல்திறன் குறிகாட்டிகள்**

4.1 நிதியத்தின் செயல்திறன் குறிகாட்டிகள்

**அத்தியாயம் 05 – பேண்தகு அபிவிருத்தி இலக்குகள் (SDG) அடைந்துக்கொள்வதன் செயலாற்றுகை**

5.1 அடையாளம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை குறிப்பிடவும்

5.2 பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் உள்ள சாதனைகள் மற்றும் சவால்களை சுருக்கமாக விவரிக்கவும்.

**அத்தியாயம் 06 - மனித வள விவரத்திரட்டு**

6.1 பணியாளர்களின் எண்ணிக்கை முகாமைத்துவம்

6.2 நிதியத்தின் செயல்திறனுக்கு மனித வள பற்றாக்குறை அல்லது அதிகம் எவ்வாறு தாக்கத்தை செலுத்தியுள்ளது என்பதை சுருக்கமாக குறிப்பிடவும்

6.3 மனித வள அபிவிருத்தி

**அத்தியாயம் 07 - இணக்க அறிக்கை**

# உரிமைகள் காப்புறுதி நிதிய தலைவரின் செய்தி

162 வருட கால நீண்ட வரலாற்றைக் கொண்ட பதிவாளர் நாயகம் திணைக்களம், அன்று முதல் இன்று வரை இலங்கை பிரஜைகளின் சிவில் மற்றும் காணி உரிமைகளைப் பதிவு செய்யும் ஒரே அரச நிறுவனமாக விளங்குகின்றது. தற்காலத்தில் டிஜிட்டல் முறைமையினூடாகப் பொதுமக்களுக்கான சேவைகளை மிகவும் வினைத்திறனுடன் வழங்குவதற்கான வழிகளை இத்திணைக்களம் உருவாக்கி வருகின்றது. சிவில் மற்றும் காணிப் பதிவுகளை மேற்கொள்வதற்கும் அவ்வாணங்களைப் பாதுகாப்பதற்கும் நாடளாவிய ரீதியில் பரந்துள்ள சுமார் 400 கிளை அலுவலகங்களின் ஊடாக, பல்வேறு சட்ட ஏற்பாடுகளுக்கமைய இத்திணைக்களம் பொதுமக்களுக்குச் சேவை வழங்கி வருகின்றது. காணிப் பதிவகங்களின் ஊடாக 1867 ஆம் ஆண்டு முதல் காணிகளுடன் தொடர்புடைய சட்ட ரீதியான ஆவணங்களைப் பதிவு செய்து வந்த இத்திணைக்களம், 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரிமைப் பதிவுச் சட்டத்தின் அறிமுகத்துடன் காணி உரிமைகளைப் பதிவு செய்யும் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றது.

காணி உரிமைப் பதிவுத் திட்டத்தின் கீழ், இலங்கையிலுள்ள ஒவ்வொரு காணித் துண்டிற்கும் ஒரு தனித்துவமான இலக்கம் வழங்கப்பட்டு, அரசாங்கத்தினால் உறுதிப்படுத்தப்பட்ட இறுதியான காணி உரிமையொன்று வழங்கப்படுகின்றது. இதன் மூலம் காணி உரிமையூடாக மக்கள் பொருளாதார ரீதியாகவும் மன ரீதியாகவும் பலப்படுத்தப்படுவதுடன், காணி அபிவிருத்திக்கான மேலதிக வாய்ப்புகளை வழங்குவதும், விஞ்ஞான ரீதியான காணி மேலாண்மையை மேற்கொள்வதும் இதன் நோக்கமாகும். இத்திட்டமானது நில அளவைத் திணைக்களம் மற்றும் காணி நிர்ணயத் திணைக்களம் ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து செயற்படுத்தப்படுகின்றது. தற்போது நாடு பூராகவும் உள்ள 37 காணி அலுவலகங்களில் உரிமைப் பதிவு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், எதிர்காலத்தில் இது மேலும் விரிவுபடுத்தப்பட்டு முழு இலங்கையையும் உள்ளடக்கிய ஒரு காணி தகவல் தொகுதி உருவாக்கப்படும்.

மேற்கூறியவாறு, காணி உரிமையாளர்களின் உரிமையைப் பாதுகாத்து அரசாங்கத்தினால் வழங்கப்படும் உரிமைச் சான்றிதழொன்று தனிநபருக்கு வழங்கப்படுவதுடன், உரிமைப் பதிவின் போது ஏதேனும் மோசடியான பதிவு காரணமாக நட்டமோ அல்லது இழப்போ ஏற்பட்ட அல்லது அநீதிக்குள்ளான ஏதேனும் ஒரு நபருக்கு, நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்படும் கட்டளையின் அடிப்படையில் இழப்பீடு வழங்குவதற்கு அரசாங்கம் கடமைப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் அத்தகைய சட்டப்பூர்வப் பொறுப்பை நிறைவேற்றுவதற்காக, இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் எனது முகாமைத்துவத்தின் கீழ் காப்புறுதி நிதியமொன்று நிறுவப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக இந் நிதியத்தின் முகாமைத்துவம் மற்றும் நிர்வாகப் பொறுப்பைக் கொண்டுள்ள முகாமைத்துவச் சபையின் அவசியமான ஆதரவு அதற்காக கிடைக்கப்பெறுகின்றது.

நிதியத்தின் முதலாவது முகாமைத்துவக் குழுக் கூட்டம் 2010 ஆம் ஆண்டில் பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் நடத்தப்பட்டது. சட்ட விதிகளுக்கு அமைய செயற்பட்டு, உரிமைக் காப்புறுதி நிதியத்தின் பணம் அரசாங்கப் பத்திரங்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டின் இறுதியில், மொத்த நிதியமானது 313 மில்லியன் ரூபாயைத் தாண்டியுள்ளது.

அதேபோல், காப்புறுதிச் சபையின் பணிகள் 2025 ஆம் ஆண்டிலும் தடையின்றி முறையாக நிறைவேற்றுவதற்கு முகாமைத்துவச் சபை மற்றும் பணியாளர்களிடமிருந்து கிடைத்த ஒத்துழைப்பு பாராட்டுக்குரியதாகும். இப்பொறுப்பினை முறையாக மேற்கொள்வதற்கு விடயபொறுப்பு அமைச்சரிடமிருந்து கிடைக்கப்பெற்ற வழிகாட்டல்களும் ஆலோசனைகளும் பெரிதும் பாராட்டத்தக்கது. மேலும், 2026 ஆம் ஆண்டில் காணி உரிமைப் பதிவு நடவடிக்கைகளை மேலும் விரிவுபடுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதால், அதற்கமைய காப்புறுதி நிதியமானது மேலும் விரிவடைவதுடன், இதன் மூலம் நன்மைகளை வழங்குவதற்கான ஆற்றலும் மேலும் பரந்ததாகும். இறுதியாக, குடிமக்களுக்கு மிகவும் நம்பகமான மற்றும் பாதுகாப்பான காணி உரிமையொன்றை வழங்குவதற்காக, இந்நிதியத்தின் செயற்பாடுகளுக்கு எதிர்காலத்திலும் எமது முனைப்பான பங்களிப்பை வழங்குவதற்கு எதிர்பார்க்கின்றேன்.

எஸ்.ஜலதீபன்
பதிவாளர் நாயகம் / உரிமைகள் காப்புறுதி நிதியத்தின் தலைவர்

# உரிமைகள் காப்புறுதி நிதிய செயலாளரின் செய்தி

1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரிமைப் பதிவு சட்டத்தின் பிரிவு 62 இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் உரிமைகள் தொடர்பாக பதிவாளர் நாயகத்தினால் முகாமைத்துவம் செய்யப்படும் உரிமைகள் காப்புறுதி நிதியம் மூலம் ஏதேனும் காணி அல்லது காணியொன்றினது தொடர்பு பற்றிய மோசடியான அல்லது பிழையான உரித்து பதிவு ஒன்றின் போது பாதிக்கப்பட்ட நபரை நீதிமன்றக் கட்டளை ஒன்றின் அடிப்படையில் இழப்பீடு வழங்கப்படுகிறது.

உரிமைச் சான்றிதழை வழங்கியதன் பின்னர் இடம்பெறும் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்வதனூடாக கிடைக்கப் பெறும் வருமானத்தில் 40% தொகையொன்று உரிமைகள் காப்புறுதி நிதியத்திற்கு வரவு வைக்கப்படுவதுடன், அதில் நிர்வாகச் செலவுகளை தவிர்த்து எஞ்சியவை 2009.08.24 ஆம் திகதிய 1616/23 என்ற இலக்க அதி விஷேட வர்த்தமானி ஒழுங்கு விதிகளின் படி அரசாங்கத்தின் பாதுகாப்பு பத்திரங்களில் முதலீடு செய்யப்படும். இதன் மூலம் காப்புறுதி நிதியம் மேலும் மேம்படுவதுடன் 2025 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் 261 மில்லியன் ரூபாவாக காணப்பட்டதுடன் அது 2025 ஆம் ஆண்டின் இறுதியில் 313 ரூபா மில்லியன் வரை அதிகரித்துள்ளது.

நிதியத்தினது ஆரம்பம் முதல் இதுவரை காலமும் நஷ்ட ஈட்டிற்காக எதுவித நீதிமன்ற கட்டளையும் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதோடு, இதன் மூலம் உரித்து பதிவின் போது மோசடியான அல்லது பிழையான உரித்து பதிவுகள் குறைவாக காணப்படுவதை எடுத்துக் காட்டுவதாக கருதுகிறேன். தற்போது காப்புறுதி நிதியத்தில் இருந்து நன்மைகள் மற்றும் குறித்த நன்மைகளை பெற்றுக்கொள்ளக் கூடிய முறை தொடர்பாகச் சுவரொட்டிகள், துண்டுப்பிரசுரங்கள் மூலம் பொது மக்களைத் தெளிவூட்டியுள்ளதுடன், எதிர் வரும் காலங்களிலும் இலத்திரனியல் ஊடகங்கள் வாயிலாக மேலும் பிரச்சார நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

உரிமைகள் காப்புறுதி நிதியம் தொடர்பாக உரித்து நிர்ணயத் திணைக்களத்துடன் இணைந்து நடாத்தப்படுகின்ற தெளிவூட்டல் நிகழ்ச்சிகளின் போது விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன், எமது திணைக்களத்தின் மாவட்ட மற்றும் மாகாண அலுவலகங்கள் ஊடாகவும் இடம்பெறுகின்ற பொது மக்கள் சந்திப்புகளின் போதும் விழிப்புணர்வுளை நடாத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

முகாமைத்துவ சபையினால் எடுக்கப்படும் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தி காப்புறுதி நிதியத்தின் நடவடிக்கைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு தற்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் அவ்விடயம் தொடர்பாக முகாமைத்துவ சபைக்கான வழிகாட்டல் மற்றும் ஆலோசனையை வழங்குதல் தொடர்பில் காப்புறுதி நிதியத்தின் தலைவர், பதிவாளர் நாயகத்திடமிருந்து கிடைக்கப்பெறும் ஒத்துழைப்புக்கு மிகுந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதற்கமைய உரிமைகள் காப்புறுதி நிதியத்தின் முகாமைத்துவ சபை மற்றும் ஊழியர்களுடன் உரித்தின் உரிமையைப் பதிவு செய்வதன் மூலம் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு மக்களுக்கு உதவுவதற்காக நேரடி பங்களிப்பினை வழங்குவதற்கு எதிர்காலத்திலும் மனைப்பான பங்களிப்பொன்றை வழங்குவதற்கு எதிர்பார்க்கின்றேன்

ஜே.ஏ.எஸ்.கே.கருணாரத்ன
உதவி பதிவாளர் நாயகம் / உரிமை காப்புறுதி நிதியத்தின் செயலாளர்

# அத்தியாயம் 01- நிதியத்தின் விவரத்திரட்டு/ நடைமுறைப்படுத்தலின் சாராம்சம்

## 1.1 அறிமுகம்

1998 ஆம் ஆண்டு 21 ஆம் இலக்க உரிமைகளை பதிவு செய்தல் சட்டத்திற்கமைய காணிகளை அளந்து நிர்ணயித்து உரித்தினை பதிவு செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, உரிய தரப்பினருக்கு உரித்து சான்றிதழ் வழங்கப்படுதல் மேற்கொள்ளப்படுகின்றது. இதற்காக இத் திணைக்களத்தின் கீழ் 31 காணி பதிவாளர் அலுவலகங்கள் உரிமைகளை பதிவு செய்யும் நடவடிக்கைகள் தற்போது செய்து வருகின்றன. மேலே குறிப்பிட்ட சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய காணி உரிமையாளரின் காணிகளின் உரித்தினை பாதுகாப்பதற்கும், அதற்காகத் தரப்பினருக்கு ஏற்படக்கூடிய இழப்பினை தடுப்பதற்காகவும் அல்லது வேறு ஏதேனும் காரணத்தினால் காணி உரிமையாளருக்கு ஏற்படக்கூடிய இழப்புக்கு நஷ்ட ஈடாகக் குறிப்பிட்டதொரு தொகைப் பணத்தினை நீதிமன்ற கட்டளையின் கீழ் மீளளிப்புச் செய்வதற்கும் சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதற்கமைய 1998 ஆம் ஆண்டு 21 ஆம் இலக்க உரிமைகள் பதிவு செய்தல் சட்டத்தின் 62(1) பிரிவிற்கமைய, இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் உரிமைகள் தொடர்பாக பதிவாளர் நாயகத்தினால் முகாமைத்துவம் செய்ய வேண்டிய உரிமைகள் காப்புறுதி நிதியத்தினை நிறுவுவதற்காக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் மற்றும் காணி அமைச்சரினால் 2003 ஜீன் மாதம் முன்வைக்கப்பட்ட பொது அமைச்சரவைப் பத்திரத்துக்காக 2003.10.08 ஆம் திகதி அமைச்சரவையின் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது.

அதற்கமைய, உரிமைகள் காப்புறுதி நிதியத்தினை அமைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், காப்புறுதி நிதியத்திற்குரிய கட்டளைகள் 2009.08.24 ஆந் திகதிய 1616/23 இலக்க அதி விஷேட வர்த்தமானி பத்திரிகை மூலம் வெளியிடப்பட்டுள்ளது அவ் விதிமுறைகளுக்கமைய உரிமைகள் காப்புறுதி நிதியத்திற்கு 2009 ஆம் ஆண்டு முகாமைத்துவ குழு ஒன்றினை நியமித்துள்ளதோடு 2010.02.23 ஆந் திகதி முதலாவது முகாமைத்துவ குழு கூட்டம் பதிவாளர் நாயக திணைக்களத்தில் நடாத்தப்பட்டுள்ளது.

உரிமைகள் காப்புறுதி நிதியத்தின் வங்கி கணக்கானது இலங்கை மத்திய வங்கியால் அனுமதிக்கப்பட்டுடுள்ள வங்கி ஒன்றில் ஆரம்பிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதோடு, அதற்கமைய பத்தரமுல்லை இலங்கை வங்கி கிளையில் உரிய கணக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்நிதியத்திற்கு உரிமைப் பதிவின் பின்னரான கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்வதற்காக அறவிடப்படும் கட்டணத்தில் இருந்து பணம் அறவிடப்படுகின்றது. காப்பீட்டு நிதியம் தொடர்பான கட்டளைகள் உள்ளடக்கப்பட்டுள்ள 2009.08.24 ஆந் திகதிய 1616/23 இலக்க அதி விஷேட வர்த்தமானி பத்திரிகையின் படி மாதத்தினுள் உரிமைகள் பதிவாளர் நாயகத்திற்கு கிடைக்கப்பெற்ற வருமானத்தில் 40% காப்புறுதி நிதியத்தின் கணக்கிற்கு வரவு வைக்கப்படல் வேண்டும். மேலும் அத்தொகையில் 25% நிதியத்தின் நிர்வாகச் செலவுகளை மேற்கொள்வதற்காகப் பதிவாளர் நாயகத்தின கணக்கிற்கு செலுத்தப்படுதல் வேண்டும்.

குறித்த வர்த்தமானி பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் காப்பீட்டு நிதியப் பணத்தின் ஆகக்கூடிய சதவீதமொன்று அரசாங்கத்தின் பாதுகாப்பு பத்திரங்களில் முதலீடு செய்யப்படுதல் வேண்டும். மேலும் 2025 ஆம் அண்டு நிறைவின் போது அவ்வாறு முதலீடு செய்யப்பட்ட உரிமைகள் காப்புறுதி நிதியத்தின் மொத்த நிதியம் 313,065,161.00 ரூபா ஆகும்.

## 1.2 நிதியம் நிறுவப்பட்டுள்ள சட்ட சட்டகம் (சட்டம், பொறுப்பு உறுதி, ஏனைய)

- 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரிமைகள் பதிவு செய்தல் சட்டத்தின் 59 மற்றும் 62 ஆவது பிரிவுகளின் ஊடாகக் காப்புறுதி நிதியம் தொடர்பான ஏற்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

- 2009.08.24 ஆம் திகதிய 1616/23 இலக்க அதி விஷேட வர்த்தமானிப் பத்திரிகை மூலம், நிதியத்தின் பணிகள், நிதியத்தின் முதலீடுகள், முகாமைத்துவக் குழு, நட்டஈடு, நிதியத்தின் நிதி நிர்வாகம் மற்றும் கணக்காய்வு தொடர்பான கட்டளைகள் விதிக்கப்பட்டுள்ளன.

- குறித்த கட்டளைகளின் பிரகாரம் காப்புறுதி நிதியம் பேணப்படுவதுடன், காப்புறுதி நிதியத்தின் வருமானம் மற்றும் நிதியம் அரச பிணையங்களில் முதலீடு செய்தல் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

    - 2025 ஆம் ஆண்டு உரிமை காப்புறுதி நிதியத்தின் மதிப்பிடப்பட்ட வருமானம் 48,880,000.00 ரூபாய் ஆகும். ஆயினும் காப்புறுதி நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்ட உண்மையான வருமானம் 49,355,340.00 ரூபாய் ஆகும். அதற்கமைய 2025 ஆம் ஆண்டு உரிமை காப்புறுதி நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்ட வருமானமானது, 2024 ஆம் ஆண்டு உரிமை காப்புறுதி நிதியத்தில் வரவு வைக்கப்பட்ட வருமானத்தை விட 475,340.00 ரூபாயால் அதிகரித்து காணப்பட்டது. 2025 ஆம் ஆண்டில் உரிமைகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்தல் கட்டணம் அதிகரித்தமை வருமானம் அதிகரிப்பதற்கான காரணமாக அமைந்துள்ளது.

## உரித்து காப்புறுதி நிதியத்தின் வளர்ச்சி




- உரிமை காப்புறுதி நிதியம் தொடர்பாக 2009.08.24 ஆம் திகதிய 1616/23ஆம் இலக்க வர்த்தமானிப் பத்திரிகை விதிகளுக்கமைய முகாமைத்துவ குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப 2025 ஆம் ஆண்டு 54,464,072.00 ரூபா புதிய முதலீடொன்று மேற்கொள்ளப்பட்டது.

- 2025 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்ட திறைச்சேரி பற்றுச்சீட்டுக்கள்/ பிணைமுறிகளின் வட்டி வருமானம் 34,500,000.00 ரூபா ஆக காணப்பட்டதுடன். உண்மையான வட்டி வருமானம் ரூபா 34,829,413.00 ஆகும்.




- இந்த காப்புறுதி நிதியத்திற்கு நிதியானது பதிவு செய்யப்பட்டுள்ள உரித்து சான்றிதழ்களில் செய்யப்படுகின்ற பிற்போடப்பட்ட கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்வதற்காக சேகரிக்கப்படுகின்ற கட்டணங்களில் இருந்தே சேகரிக்கப்படுகின்றது. இது வரையிலும் விநியோகிக்கப்பட்டுள்ள உரிமை சான்றிதழ்களுக்கான பிற்போடப்பட்ட கொடுக்கல் வாங்கல் 73,709 சாதனங்கள் 2025 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

- 2025 ஆம் ஆண்டின் ஆரம்பத்தின் போது உரிமை காப்புறுதி நிதியத்தின் மொத்த நிதியம் ரூபா 261,861,226.00 ஆகும். 2025 ஆம் ஆண்டின் நிறைவின் போது கட்டுப்பாட்டு மேலதிக தொகையினை சேர்த்ததன் பின்னர் மொத்த சேர்க்கப்பட்ட நிதி ரூபா 313,065,161.00 ஆகும்.

- உரிமைகள் பதிவாளர் நாயகத்தின் தலைமைத்துவத்தினையுடைய முகாமைத்துவ சபை இவ் வருடத்திற்குள் ஐந்து தடவைகள் ஒன்று கூடியது. 2025 ஆம் ஆண்டில் காப்புறுதி நிதியத்தின் கணக்காய்வுக் குழு நான்கு தடவைகள் நடாத்தப்பட்டது.

- சுவரொட்டிகள் மற்றும் துண்டுப்பிரசுரங்களை விநியோகிப்பதன் மூலம், உரிமைகள் காப்புறுதி நிதியம் மற்றும் அதன் நன்மைகள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டும் நடவடிக்கைகள் 2025 ஆம் ஆண்டிலும் முன்னெடுக்கப்பட்டன.

- அத்தோடு அரச நிதி திணைக்களத்தினது ஆலோசனையின் பிரகாரம் 2022 ஆம் ஆண்டு தொடக்கம் செயலாற்றுகை அறிக்கை மும்மொழிகளிலும் அச்சிடப்படல் ஆரம்பிக்கப்பட்டது.

## 1.3 நிதியத்தின் குறிக்கோள்கள்

- 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரிமைகள் பதிவு செய்தல் சட்டத்தின் 62 ஆவது பிரிவின் கீழ் காப்புறுதி நிதியம் நிறுவப்பட்டுள்ளது.

- இச் சட்டத்தின் 59 ஆவது பிரிவின் கீழ் நீதிமன்றமொன்றினால் பிறப்பிக்கட்ட உத்தரவொன்றிற்கமைய பதிவேட்டில் எதெனுமொரு திருத்தம் அல்லது,

- 59 ஆவது பிரிவின் கீழ் நீதிமன்றமொன்றினால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவொன்றிற்கமைய, பதிவேட்டைத் திருத்தம் செய்யாமை.

- காரணமாகக் கொண்டு இழப்பு அல்லது நஷ்டங்களை ஏற்க நேரிட்ட அல்லது பாதிக்கப்பட்ட நபரொருவர், நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்படுகின்ற உத்தரவொன்றின் படி அரசாங்கத்தால் காப்புறுதி நிதியத்தில் இழப்பீட்டினை மீள் நிரப்புதலாகும்.

## 1.4 நிதியத்தின் நோக்கு, பணிக்கூற்று, குறிக்கோள்

### நோக்கு

காணியின் உரிமையினைப் பதிவு செய்வதன் மூலம் மக்களது காணி உரிமைகளை பாதுகாப்பதற்கு மக்களுக்கு உதவுதல்.

### பணிக்கூற்று

மோசடியான முறையில் மேற்கொள்ளப்பட்ட பதிவொன்றின் காரணமாக நட்டம் அல்லது இழப்புகளுக்கு உள்ளான அல்லது பாதிப்புக்குள்ளான எவரேனும் ஒருவருக்கு, நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்படும் கட்டளையூடாக இழப்பீடு வழங்குவதாகும்.

### குறிக்கோள்

1998 அம் ஆண்டு 21 ஆம் இலக்க உரிமைகள் பதிவு செய்தல் சட்டத்தினால் காணிகள் தொடர்பாக காணி உறுதிகள் மூலம் இடம்பெறும் கொடுக்கல் வாங்கல்களை ஆவணப்படுத்துவதற்குப் பதிலாக காணிகளின் உரிமைகள் பதிவு மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வுரித்துகள் பதிவின் போது ஏற்படக்கூடிய மோசடி நடவடிக்கைகள் காரணமாக உரித்துத் தொடர்பான தவறான தீர்மானம் கட்சிதார்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்பு தொடர்பாக அரசு பொறுப்புகளுக்கு கட்டுப்படுவதுடன், அதற்கமைய ஏற்படும் இழப்பீட்டுக்கு பதிலாக இழப்பீடு செலுத்துவதற்கு இச் சட்டத்தினால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த குறிக்கோளை உடையதாக உரிமை காப்புறுதி நிதியம் நிறுவப்பட்டது. இந்த மீளளிப்பினை மேற்கொள்ளும் போது சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய நீதிமன்ற நடவடிக்கையொன்றிற்குச் செல்ல வேண்டியதுடன், நீதிமன்றத்தினால் வழங்கப்படுகின்ற தீர்ப்பொன்றினால் குறித்த கட்சியினருக்கு செலுத்த வேண்டிய இழப்பீட்டுத்தொகை தீர்மானிக்கப்படும்.

## 1.5 பிரதான செயற்பாடுகள்

1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரிமைகள் பதிவு செய்தல் சட்டத்தின் 62 ஆவது பிரிவின் கீழ் நிறுவப்பட்ட காப்புறுதி நிதியத்தின் பிரதான பணிகளாவன, இச் சட்டத்தின் 59 ஆவது பிரிவின் கீழ் நீதிமன்றத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற கட்டளைக்கமைய பதிவேட்டில் ஏதேனுமொரு திருத்தம் அல்லது 59 ஆம் பிரிவின் கீழ் நீதிமன்றத்தினால் மேற்கொள்ளப்பட்ட கட்டளையின் பிரகாரம் பதிவேட்டில் திருத்தங்களை மேற்கொள்ளாதிருத்தலின் காரணமாக இழப்பு அல்லது நஷ்டத்தை சந்தித்த அல்லது பாதிக்கப்பட்ட ஏதேனுமொரு நபர், நீதிமன்றத்தினால் மேற்கொள்ளப்படும் கட்டளைக்கமைய நஷ்டஈட்டினை மீள் நிரப்பீடு செய்தலாகும்.

### ➢ நஷ்டஈடு வழங்குதல்.

- 2009.08.24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானிப் பத்திரிகையின் 22 ஆவது பிரிவின் பிரகாரம் ஏதேனும் காணியொன்றினது அல்லது ஏதேனும் காணியின் தொடர்பு பற்றி மோசடியான அல்லது தவறான விதத்திலான உரித்து பதிவொன்று இடம்பெற்றிருப்பின் அவ்வாறு இடம்பெற்று 03 வருடத்திற்குள் பாதிப்பிற்குள்ளான நபரினால் நஷ்டஈட்டினை பெற்றுக்கொள்வதற்காக நீதிமன்றத்தில் வழக்கொன்றினை தாக்கல் செய்தல் வேண்டும்.

- உரிமைப் பதிவாளர் நாயகம் குறித்த வழக்கின பிரதிவாதியாகச் சேர்க்கப்பட வேண்டும் என்பதுடன், பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு மோசடி இழைத்து நட்டத்தை ஏற்படுத்திய அல்லது அதற்குப் பங்களித்த நபர் அல்லது நபர்கள் சம பிரதிவாதிகளாக்கப்படுவார்கள்.

- வர்த்தமானிப் பத்திரிகையின் 25 ஆவது பிரிவின் பிரகாரம் நஷ்டஈட்டினை செலுத்தும் படி நீதிமன்றத்தினால் கட்டளை பிரப்பிக்கப்படும் சந்தர்ப்பத்தில் நீதிமன்ற கட்டளைக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்பட்டிருக்கவில்லையெனின், நீதிமன்ற கட்டளை திகதியில் இருந்து 3 மாத காலப்பகுதிக்குள் குறித்த நஷ்டஈட்டினை செலுத்துதல் வேண்டும்.

- அத்தோடு நஷ்டஈட்டினை செலுத்துவதற்கு 3 மாதங்களுக்கு மேலதிகமாக தாமதிக்கும் சந்தர்ப்பத்தில் மொத்த நஷ்டஈட்டுத் தொகையினையும் செலுத்தி முடிக்கும் வரையிலும் குறித்த நஷ்டஈட்டுத் தொகை அல்லது எஞ்சியுள்ள அதன் நிலவையின் அடிப்படையில் சட்டரீதியான வட்டி செலுத்தப்படும்.

- இது வரையிலும் நிதியத்தில் இருந்து செலுத்த வேண்டிய நஷ்டஈடுகள் தொடர்பாக எவ்விதமான நீதிமன்ற தீர்ப்பும் கிடைக்கப்பெறாமையால் உரிமைகள் காப்புறுதி நிதியம் மூலம் எவ்விதமான இழப்பீடுகளுக்கேனும் நஷ்டஈடுகள் செலுத்தப்பட்டில்லை.

## ➢ நிதியம் குறித்து முகாமைத்துவ குழுவினது பொறுப்பு

I. முழுமையாக நிதியத்தின் முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம் பற்றிய பொறுப்பு.

II. சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இழப்பீட்டினை பெற்றுக்கொள்வதற்கான உரிமை கோரலானது சாதாரணமானதா இல்லையா என்பது குறித்து உரிமைகள் பதிவாளர் நாயகத்திற்கு ஆலோசனை வழங்குதல்.

III. குழுவின் செயற்பாடு மற்றும் பொறுப்பினை செயற்திறனாக நிறைவேற்றுவதற்காக அதன் நடைமுறைகளை கட்டுப்படுத்தும் சட்டங்கள் மற்றும் வழிகாட்டல்களை தயாரித்தல் மற்றும் கடைப்பிடித்தல்.

IV. இழப்பீடுகளுக்கு உரிமை கோரல்கள் தொடர்பான விசாரிப்புகளை மேற்கொள்ளல் மற்றும் சட்டத்தின் பிரகாரம் இழப்பீடுகளுக்கு செலுத்த வேண்டின் நபரின் தவறான தன்மை, அந் நபர்களை அடையாளம் காணல் மற்றும் நிதியத்தினை வழமைக்கு கொண்டுவருவதற்காக அந்த நபர்களில் இருந்து அறிவிட்டுக்கொள்ள வேண்டிய பணத்தொகையினை முடிவுச் செயதல்.

V. (IV) ஆவது பந்தியின் கீழ் நிதியத்திற்கு ஏற்பட்ட இழப்பீடுகளை அறவிட்டுக்கொள்ளல் குறித்து உரிமைகள் தொடர்பாக பதிவாளர் நாயகத்தினால் கடைபிடிக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக அவருக்கு ஆலோசனை வழங்குதல்.

VI. நிதியத்தின் கணக்குகளுக்கான அறிக்கைகள் மற்றும் நிதியம் செயற்பாடானது அனுமதிக்கப்பட்டுள்ள தரங்களுக்கமைய செயற்படுத்தப்படுகின்றதா என்பது தொடர்பாக விசாரித்தல் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் அவ்விடயம் தொடர்பாக உரிமைகள் தொடர்பான பதிவாளர் நாயகத்திற்கு ஆலோசனை வழங்குதல்.

VII. குழுவினால் நடவடிக்கை எடுக்கப்படுகின்ற சகல விடங்களுக்குமான அறிக்கைகளின் உண்மைதன்மை, முழுமை மற்றும் பாதுகாப்பு தொடர்பாக உறுதிச் செய்ய தேவையான சகலவிதமான நடவடிக்கைகளையும் எடுத்தல்.

VIII. உரிமைகள் தொடர்பான பதிவாளர் நாயகத்தினால் மற்றும் மத்திய வங்கியினால் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படும் சகல நிதி அறிக்கைகளையும் மதிப்பாய்வு செய்தல்.

IX. நிதியத்திற்கான நிதி கிடைக்கப்பெறல் (நிதி வரவு) மற்றும் நிதியத்தின் நிதி வெளியே செல்லுதல் (செலவு) தொடர்பாக தொடர்ந்து மதிப்பாய்வு செய்தல் மற்றும் பாதக சந்தர்ப்பங்களை சரி செய்வதற்கான சரியான நடவடிக்கைகளை எடுத்தல்.

X. வருடாந்த மதிப்பிடப்பட்ட நிர்வாகச் செலவுளை மதிப்பாய்வு செய்ததன் பின்னர் மற்றும் தேவையெனின் அவற்றை திருத்திய பின்னர் அனுமதித்தல்.

## 1.6 தாபன கட்டமைப்பு

### 2025 ஆம் ஆண்டின் முகாமைத்துவ குழு அங்கத்தவர்கள்

- உரிமைகள் தொடர்பாக பதிவாளர் நாயகம் (தலைவர்) -
  திரு டப்ளியூ.ஆர்.ஏ.என்.எஸ்.விஜயசிங்ஹ
  
  எஸ்.ஜலதீபன்

- பொது நிர்வாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் முகவர்,
  பிரதான கணக்காளர், உள்நாட்டலுவல்கள் பிரிவு - திருமதி யூ.ஜீ.ஆர்.தமயந்தி
  
  சிரேஷ்ட உதவி செயலாளர், உள்நாட்டலுவல்கள் பிரிவு – திரு கே.டி.சி.எஸ்.குமாரதுங்க

- கமத்தொழில், கால்நடை வளங்கள் காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் முகவர்,
  பிரதான கணக்காளர் - திரு ஈ.எல்.ஏ.பீ.குமார

- நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு,
  சிரேஷ்ட உதவி செயலாளர் - திரு என்.பீ.குமாரகே

- இலங்கை மத்திய வங்கியின் முகவர்,
  அதிகார, ஊழியர் சேம நிதிய திணைக்களம் - திரு டி.எல்.நிஹால்

- அரசாங்க மதிப்பீட்டு திணைக்களம்
  பிரதான மதிப்பீட்டாளர் - திரு ஏ.எஸ்.டப்ளியூ.கே.நானாயக்கார

## 1.7 வெளிநாட்டு நன்கொடைகளை பெறும் கருத்திட்டங்கள் பற்றிய தகவல்கள்

உரிமைகள் காப்புறுதி நிதியத்திற்காக வெளிநாட்டு நன்கொடைகள் கிடைக்கப்பெறுகின்ற திட்டங்கள் இல்லாமை காரணமாக 1.7 ஏற்புடையதன்று.

# அத்தியாயம் 02 - முன்னேற்றம் மற்றும் முன்நோக்கு

- உரிமைகள் காப்புறுதி நிதியமானது 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரிமைகள் பதிவு செய்தல் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் 2009.08.24 ஆம் திகதிய 1616/23 இலக்கமுடைய அதி விஷேட வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளைகளுக்கமையவே நிறுவப்பட்டுள்ளது.

- 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரிமைகள் பதிவு செய்தல் சட்டத்தின் 62 ஆவது பிரிவின் கீழ் நிறுவப்பட்ட காப்புறுதி நிதியத்தின் பிரதான பணிகளாவன, இச் சட்டத்தின் 59 ஆவது பிரிவின் கீழ் நீதிமன்றத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற கட்டளைக்கமைய பதிவேட்டில் ஏதேனுமொரு திருத்தம் அல்லது 59 ஆம் பிரிவின் கீழ் நீதிமன்றத்தினால் மேற்கொள்ளப்பட்ட கட்டளையின் பிரகாரம் பதிவேட்டில் திருத்தங்களை மேற்கொள்ளாமை காரணமாக இழப்பு அல்லது நஷ்டத்தை சந்தித்த அல்லது பாதிக்கப்பட்ட ஏதேனுமொரு நபருக்கு, நீதிமன்றத்தினால் மேற்கொள்ளப்படும் கட்டளைக்கமைய நஷ்டஈடு வழங்குதலாகும்.

- ஆயினும் இதுவரை காலமும் நிதியத்தில் இருந்து செலுத்த வேண்டிய நஷ்டஈடுகள் குறித்து எவ்வித நீதிமன்ற தீர்ப்பும் கிடைக்கப்பெற்றில்லாமையினால் உரிமைகள் காப்புறுதி நிதியத்தினால் எவ்வித இழப்பீட்டு நஷ்டஈடும் வழங்கப்படவில்லை.

- மேற்குறிப்பிட்ட காரணங்களுக்கமைய இந்த நிதியமானது நஷ்டஈடுகள் வழங்குவதை குறிக்கோளாக கொண்டு நிறுவப்பட்ட நிதியம் என்பதனால் அடையாளம் காணப்பட்ட விஷேட வெற்றிகள், சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகளை விஷேடமாக சுட்டிக் காட்ட முடியாது.

S. Jalatheepan
Registrar General
Registrar General's Department
234/A3, Denzil Kobbekaduwa Mawatha,
Koswaita, Battaramulla.

..........................

**எஸ்.ஜலதீபன்**
பதிவாளர் நாயகம் /தலைவர்
உரிமைகள் காப்புறுதி நிதியம்

**திகதி :** 2026.06.25

# அத்தியாயம் 03 - வருடத்தின் ஒட்டுமொத்த நிதி செயலாற்றுகை

## 3.1 2025.12.31 ஆம் திகதியில் நிறைவுபெறும் வருடத்திற்கான நிதி பிரகடணங்கள்

### 3.1.1 நிதி நிலைமைக் கூற்று

உரிமைகள் காப்புறுதி நிதியம்
2025.12.31 ஆம் திகதிக்கு
நிதி நிலைமைக் கூற்று

ரு

| 2024.12.31 | | குறிப்புகள் | 2025.12.31 | |
|---|---|---|---|---|
| | **சொத்துக்கள்** | 3 | | |
| 195,094,182 | முதலீடுகள்- 01) நடைமுறையல்லா | | | |
| | - திறைசேரி பிணைமுறிகள் | | 274,785,997 | 274,785,997 |
| | 02) நடைமுறை | | | |
| 54,185,865 | - திறைசேரி பிணைமுறிகள் | | 23,597,406 | |
| - | - திறைசேரி பற்றுச்சீட்டுக்கள் | | 3,630,276 | 27,227,682 |
| 249,280,047 | | | | 302,013,679 |
| | **நடைமுறை சொத்துக்கள்** | | | |
| 8,082,520 | கிடைக்க வேண்டிய திறைசேரி பிணைமுறி வட்டி | 4 | 8,145,951 | |
| - | கிடைக்க வேண்டிய திறைசேரி பற்றுச்சீட்டுக்களுக்கான வட்டி | 4 | 9,335 | |
| 1,150,441 | கிடைக்க வேண்டிய திறைசேரி பிணைமுறி திரண்ட வட்டி | 4 | 339,874 | |
| - | உரித்து பதிவாளரின் கணக்கிலிருந்து கிடைக்க வேண்டிய பணம் | 5 | 4,665 | |
| 3,698,218 | வங்கி நிலுவை | 6 | 4,112,992 | 12,612,817 |
| 262,211,226 | மொத்த சொத்துக்கள் | | | 314,626,496 |
| | **குறைத்தல் – நடைமுறைப்பொறுப்பு** | | | |
| (350,000) | கணக்காய்வு கட்டணம் ஒதுக்கீட்டு கணக்கு | 7 | 400,000 | |
| - | செலுத்த வேண்டிய வருமான வரி | 8 | 1,161,335 | (1,561,335) |
| 261,861,226 | தேறிய சொத்துக்கள் | | | 313,065,161 |
| 193,211,590 | மொத்த நிதியம் | 17 | | 241,102,118 |
| 68,649,636 | கூட்டுதல் –செயற்பாட்டு மிகை | | | 71,963,043 |
| 261,861,226 | நிதியம் | | | 313,065,161 |

மேலுள்ள கணக்கு இலங்கை பொதுக்கணக்கீட்டு நிதியத்திற்கு அமைய தயார் செய்யப்பட்டுள்ளதுடன் அக் கணக்குகளின் உண்மைத் தன்மை தொடர்பில் பொறுப்பு கூறுவதாக உறுதிப்படுத்துகின்றேன்.

| | | |
|---|---|---|
| எஸ்.ஜலதீபன் | ஆர்.டீ.கே.வெலிவிட்டகே | ஈ.எல்.ஏ.பீ.குமார |
| பதிவாளர் நாயகம் / தலைவர் | பிரதான கணக்காளர் | பிரதான கணக்காளர் |
| உரித்து காப்புறுதி நிதியம் | பதிவாளர் நாயகம் திணைக்களம் | காணி அமைச்சு |
| | | பத்தரமுல்லை |

R.T.K. Welivitage
Chief Accountant
Registrar General's Department
Battaramulla

E.L.A.P. Kumara
Chief Accountant
Ministry of Agriculture, Livestock, Lands and Irrigation (Land Section)
"Mihikatha Medura" Land Secretariat
1200/6, Rajamalwatta Road, Battaramulla

திகதி :- 2026.06.12

S. Jalatheepan.
Registrar General
Registrar General's Department
234/A3, Denzil Kobbekaduwa Mawatha,
Koswatta, Battaramulla.

## 3.1.2. நிதி செயலாற்றுகை கூற்று

உரிமைகள் காப்புறுதி நிதியம்
2025.12.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான
நிதி செயலாற்றுகை கூற்று

ரு

| 2024.12.31க்கு வருமானம் /செலவினம் | | | குறிப்புகள் | 2025.12.31க்கு வருமானம் /செலவினம | | |
|---|---|---|---|---|---|---|
| திருத்தப்பட்ட மதிப்பீடு | உண்மையான பெறுமதி | | | திருத்தப்பட்ட மதிப்பீடு | உண்மையான பெறுமதி | |
| | | **வழுக்கள்** | | | | |
| 44,800.000 | 44,169,276 | உரித்து பதிவுக்கட்டண வருமானம் | 9 | 48,880.000 | | 49,355,340 |
| | (67,388) | மொத்த நிதியத்திற்கு முன்னைய ஆண்டின் சீராக்கம் | | | | |
| 28,250,000 | | **திறைசேரி முதலீட்டு வட்டி வருமானம்** | 4 | 34,500,000 | | |
| | 569,722 | ரிபோ பற்றுச்சீட்டு வரி வருமானம் | | | 453,384 | |
| | 27,856,160 | திறைசேரி பிணைமுறிகளின் வட்டி வருமானம் | | | 34,058,055 | |
| | 1,293,094 | திறைசேரி பற்றுச்சீட்டுக்களின் வட்டி வருமானம் | | | 80,284 | |
| | (15,750) | திறைசேரி பிணைமுறி கூடுதல் கட்டணம் | | | 237,691 | 34,829,413 |
| **73,050,000** | **73,805,114** | | | **83,380,000** | | **84,184,753** |
| | | **செலவினங்கள்** | | | | |
| 174,000 | 174,000 | முகாமைத்துவக் குழு கொடுப்பனவு | 10 | 168,000 | 168,000 | |
| 96,000 | 96,000 | கணக்காய்வு முகாமைத்துவக்குழு கொடுப்பனவு | 11 | 96,000 | 96,000 | |
| 544,000 | 528,825 | பணிக்குழு கொடுப்பனவு | 12 | 707,841 | 706,982 | |
| 44,000 | 35,230 | உபசரணை செலவுகள் | 13 | 33,823 | 32,242 | |
| 343,380 | 693,380 | கணக்காய்வு கட்டணம் (2025 வருடம்) | 7 | 754,000 | 400,000 | |
| 40,000 | 40,000 | முதன்மை ஏல மனுக் கட்டணம் | 14 | 80,000 | 80,000 | |
| 155,300 | 175,300 | விளம்பர செலவுகள் | 15 | 233,400 | 233,400 | |
| 21,461,864 | 3,363,777 | வருமான வரி செலவுகள் | 8 | 31,166,147 | 10,448,824 | |
| 48,968 | 48,968 | காகிதாதிகள் | 16 | 66,263 | 56,263 | |
| **(22,907,512)** | **(5,155,480)** | **மொத்த செலவினங்கள்** | | **(33,305,474)** | | **(12,221,711)** |
| **50,142,488** | **68,469,636** | **நடப்பாண்டிற்கான மிகை** | | **50,074,526** | | **71,963,043** |

எஸ்.ஜலதீபன்
பதிவாளர் நாயகம்
உரித்து காப்புறுதி நிதியத்தின் தலைவர்

ஆர்.ட.கே.வெளிவிட்டகே
பிரதம கணக்காளர்
பதிவாளர் நாயகம் திணைக்களம்

ஈ.எல்.ஏ.பீ.குமார
பிரதம கணக்காளர்
காணி அமைச்சு, பத்தரமுல்லை

திகதி :- 2026.06. 12

S. Jalatheepan
Registrar General
Registrar General's Department
234/A3, Denzil Kobbekaduwa Mawatha,
Koswatta, Battaramulla.

R.T.K. Welivitage
Chief Accountant
Registrar General's Department
Battaramulla

E.L.A.P. Kumara
Chief Accountant
Ministry of Agriculture, Livestock, Lands and Irrigation (Land Section)
"Mihikatha Medura" Land Secretariat
1200/6, Rajamalwatta Road, Battaramulla.

## 3.1.3 காசுப்பாய்ச்சல் கூற்று

உரிமைகள் காப்புறுதி நிதியம்
2025.12.31இல் முடிவடைந்த வருடத்திற்கான
காசுப்பாய்ச்சல் கூற்று

ரூ

| 2025.01.01 | | | குறிப்புகள் | 2025.12.31 | | |
|---|---|---|---|---|---|---|
| | | செயற்பாட்டு நடவடிக்கைகளிலான காசுப்பாய்ச்சல் | | | | |
| | 44,169,276 | பெறுவனவுகள் | 9 | | | 49,355,340 |
| | | உரித்து பதிவு செய்தல் வருமானம் | 4 | | | |
| - | | முதலீடுகளினால் கிடைக்கப்பெற்ற வட்டி | | | 453,384 | |
| 27,763,915 | | ரிபோ பற்றுச்சீட்டு வரி வருமானம் | | | 70,949 | |
| - | | திறைசேரி பிணைமுறிகளை முதலீடு செய்தமையினால் கிடைக்கப்பெற்ற வட்டி வருமானம் | | | 36,834,361 | |
| | 27,763,915 | திரட்டப்பட்ட பிணைமுறி வட்டி | | | | 37,358,693 |
| | 71,933,191 | | | | | 86,714,033 |
| | | கொடுப்பனவுகள் | | | | |
| 528,825 | | பணியாளர் கொடுப்பனவு | 12 | | 706,982 | |
| 35,230 | | உபசரணை செலவு | 13 | | 32,242 | |
| 174,000 | | முகாமைத்துவ குழு கொடுப்பனவு | 10 | | 168,000 | |
| 96,000 | | கணக்காய்வு முகாமைத்துவகுழு | 11 | | 96,000 | |
| 48,968 | | கொடுப்பனவு | 16 | | 56,263 | |
| 175,300 | | அச்சிடுதல் மற்றும் காகிதாதிகள் கட்டணம் | 15 | | 233,400 | |
| 3,363,777 | | விளம்பர செலவு | 8 | | 30,103,636 | |
| 343,380 | | வருமான வரி | 7 | | 354,000 | |
| 40,000 | | கணக்காய்வு கட்டணம் | 14 | | 80,000 | |
| - | | முதன்மை ஏல கட்டணம் | 5 | | 4,665 | |
| | (4,805,479) | உரித்து பதிவாளர் கணக்கிற்கு செலுத்திய கட்டணம் | | | | (31,835,188) |
| | 67,127,712 | செயற்பாட்டு நடவடிக்கைகளிலான தேறிய காசுப்பாய்ச்சல் | | | | 54,878,845 |
| | | முதலீட்டு நடவடிக்கைகளிலான காசுப்பாய்ச்சல் | | | | |
| 151,823,326 | | முதிர்வடைந்த ரிபோ பற்றுச்சீட்டுக்கள் | | 155,664,686 | | |
| 59,313,744 | | முதிர்வடைந்த திறைசேரி பற்றுச்சீட்டுக்கள் | | 23,191,202 | | |
| 105,856,000 | 316,993,070 | முதிர்வடைந்த திறைசேரி பிணைமுறிகள் | | 51,036,400 | 229,892,289 | |
| (174,102,801) | | திறைசேரி பிணைமுறிகள் | | 101,870,196 | | |
| (58,020,650) | | திறைசேரி பற்றுச்சீட்டுக்கள் | | 26,821,478 | | |
| (151,253,603) | | ரிபோ பற்றுச்சீட்டுக்கள் | | 155,664,686 | | |
| | | முதலீடுகளின் பெறுமதி | | | (284,356,361) | |
| | (383,377,054) | முதலீட்டு நடவடிக்கைகளிலான தேறிய காசுப்பாய்ச்சல் | | | | (54,464,072) |
| | 743,728 | காசும் காசிற்கு சமனானவைகளின் தேறிய அதிகரிப்பு /குறைவு | | | | 414,774 |
| | 2,954,490 | காலப்பகுதியின் ஆரம்பத்தில் காசும் காசிற்கு சமனானவைகளும் | | | | 3,698,218 |
| | **3,698,218** | காலப்பகுதியின் இறுதியில் காசும் காசிற்கு சமனானவைகளும் | | | | **4,112,992** |

மேற்குறிப்பிடப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்றில் காசு மற்றும் காசிற்குச் சமமானவையாக, நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டுள்ள வங்கி மீதி மாத்திரமே உள்ளடக்கப்பட்டுள்ளது.

ஆர்.டீ.கே.வெலிவிட்டகே
பிரதான கணக்காளர்
பதிவாளர் நாயகம் திணைக்களம்

R.T.K. Welivitage
Chief Accountant
Registrar General's Department
Battaramulla

## 3.1.4 கொள்ளல் மற்றும் கொடுத்தல் கணக்கு

உரித்துக் காப்புறுதி நிதியம்
2025.12.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான
கொள்ளல் கொடுத்தல் கணக்கு

ரூ

| 2025.01.01 | | குறிப்புகள் | 2025.12.31 | |
|---|---|---|---|---|
| 2,954,490 | 2025.01.01ஆம் திகதிக்கு மீதிகள் | | | 3,698,218 |
| | **பெறுவனவுகள்** | | | |
| 105,856,000 | முதிர்வடைந்த முதலீடுகள் - திறைசேரி பிணைமுறிகள் | 03 | 51,036,400 | |
| 59,313,744 | முதிர்வடைந்த முதலீடுகள் - திறைசேரி பற்றுச்சீட்டுகள் | 03 | 23,191,202 | |
| 151,253,603 | முதிர்வடைந்த முதலீடுகள் - ரிபோ பற்றுச்சீட்டுக்கள் | 03 | 155,664,686 | |
| 44,169,276 | உரித்துகள் பதிவுசெய்தல் வருமானம் | 09 | 49,355,340 | |
| 569,722 | ரிபோ பற்றுச்சீட்டுகள் முதலீட்டினால் கிடைக்கப்பெற்ற வட்டி | 04 | 453,384 | |
| - | திறைசேரி பற்றுச்சீட்டுக்களினால் கிடைக்கப்பெற்ற வட்டி | 04 | 70,949 | |
| 27,763,915 | திறைசேரி பிணைமுறிகளினால் கிடைக்கப்பெற்ற வட்டி | 04 | 34,055,663 | |
| - | திறைசேரி பிணைமுறிகளினால் ஈட்டப்பட்ட வட்டி | 04 | 2,778,698 | 316,606,322 |
| | | | | 320,304,540 |
| 391,880,751 | **மொத்த பெறுவனவுகள்** | | | |
| | **கொடுப்பனவுகள்** | | | |
| 171,358,886 | திறைசேரி பிணைமுறிகளிலான முதலீடுகள் | 03 | 99,902,064 | |
| 2,743,915 | திறைசேரி பிணைமுறிகளில் ஈட்டப்பட்ட வட்டி | 04 | 1,968,131 | |
| 151,253,603 | முதலீடுகள் - ரிபோ பற்றுச்சீட்டுகள் | 03 | 155,664,686 | |
| 58,020,650 | திறைசேரி பற்றுச்சீட்டுக்களினாலான முதலீடுகள் | 03 | 26,821,478 | |
| 174,000 | முகாமைத்துவக் குழு கொடுப்பனவு | 10 | 168,000 | |
| 96,000 | கணக்காய்வு முகாமைத்துவக் குழு கொடுப்பனவு | 11 | 96,000 | |
| 528,825 | பணியாளர்குழு கொடுப்பனவு | 12 | 706,982 | |
| 35,230 | உபசரனை செலவுகள் | 13 | 32,242 | |
| 48,968 | அச்சிடுதல் மற்றும் காகிதாதி செலவுகள் | 16 | 56,263 | |
| 175,300 | விளம்பர செலவுகள் | 15 | 233,400 | |
| 3,363,777 | வருமான வரி | 8 | 30,103,636 | |
| 343,380 | கணக்காய்வு கட்டணம் | 7 | 354,000 | |
| 40,000 | ஆரம்ப ஏல விலைமனுக் கட்டணம் | 14 | 80,000 | |
| - | உரித்து பதிவாளர் கணக்கிற்கு செலுத்திய கட்டணம் | 5 | 4,665 | |
| 388,182,534 | **மொத்த கொடுப்பனவுகள்** | | | (316,191,548) |
| **3,698,218** | **2025.12.31 ஆம் திகதிக்கு இறுதி நிலுவை** | | | **4,112,992** |

ஆர்.டீ.கே.வெலிவிட்டகே
பிரதம கணக்காளர்
பதிவாளர் நாயகத்திற்கு பதிலாக

R.T.K. Welivitage
Chief Accountant
Registrar General's Department
Battaramulla

## 3.1.5 தேறிய சொத்து/நிறை மாற்றமைடைதல் கூற்று

| உரித்துக் காப்புறுதி நிதியம்<br>2025.12.31இல் முடிவடைந்த வருடத்திற்கான<br>தேறிய சொத்து நிறை மாற்றமடைந்தமைக்கான கூற்று | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | கட்டுப்பாட்டு உரிமையாளர்களுக்கானது | | | | | சாதாரண பங்குரிமைகள் | மொத்த தேறிய சொத்து/ பங்குலாபம் |
| | மூலதன பங்களிப்பு | வேறு ஒதுக்கம் | மாற்றப்பட்ட ஒதுக்கம் | மொத்த இலாபம் (நட்டம்) | மொத்தம் | | |
| 2025.01.01ஆம் திகதிக்கு மீதி | - | - | - | 261,861,226 | 261,861,226 | - | 261,861,226 |
| கணக்கீட்டு நியமங்களின் மாற்றங்கள் | - | - | - | - | - | - | - |
| மீள் வெளியிடப்பட்ட மீதி | - | - | - | - | - | - | - |
| 2025 இற்கான தேறிய சொத்து /பங்குலாப மாற்றங்கள் | - | - | - | - | - | - | - |
| சொத்து மீள்மதிப்பீட்டு மிகை | - | - | - | - | - | - | - |
| முதலீட்டு மீள்மதிப்பீட்டிற்கமைய மிகை | - | - | - | - | - | - | - |
| வெளிநாட்டு செயற்பாட்டு செலாவணி பரிவர்த்தனை நஷ்டம் | | | | | | | |
| தேறிய சொத்து /பங்குலாபங்களில் கண்டறியப்பட்ட தேறிய வழுக்களின் அதிகரிப்பு | - | - | - | (20,759,108) | (20,759,108) | - | (20,759,108) |
| காலப்பகுதியின் மிகை | - | - | - | 71,963,043 | 71,963,043 | - | 71,963,043 |
| காலப்பகுதிக்காக கண்டறிந்த மொத்த வருமானங்களும் செலவினங்களும் | - | - | - | - | - | - | - |
| 2025.12.31ஆம் திகதிக்கு முன்கொண்டு சென்ற மீதி | - | - | - | **313,065,161** | **313,065,161** | - | **313,065,161** |

## 3.1.6 மீதி சரிபார்ப்பு

உரித்துக் காப்புறுதி நிதியம்
2025.12.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான
மீதி சரிபார்ப்பு

ரு

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| விளம்பர செலவு கணக்கு | 233,400 | |
| கணக்காய்வு கட்டண கணக்கு (2025 ஆம் அண்டு) | 400,000 | |
| முகாமைத்துவக் குழு கூட்ட கொடுப்பனவு கணக்கு | 96,000 | |
| வருமான வரி செலவு கணக்கு (2025 ஆம் அண்டு) | 10,448,824 | |
| திறைசேரி பற்றுச்சீட்டுக்களின் முதலீட்டுக் கணக்கு | 3,630,276 | |
| திறைசேரி பிணைமுறிகளுக்கான முதலீட்டுக் கணக்கு | 298,383,403 | |
| முகாமைத்துவக் குழு கொடுப்பனவு கணக்கு | 168,000 | |
| அச்சிடுதல் மற்றும் காகிதாதிகள் செலவு கணக்கு | 56,263 | |
| கிடைக்க வேண்டிய திறைசேரி பிணைமுறிகளின் ஈட்டப்பட்ட வரி கணக்கு | 339,874 | |
| கிடைக்க வேண்டிய திறைசேரி பற்றுச்சீட்டுக்களின் வட்டி கணக்கு | 9,335 | |
| கிடைக்க வேண்டிய திறைசேரி பிணைமுறிகளின வட்டி கணக்கு (அட்டவணை 03) | 8,145,951 | |
| உபசரனை செலவு கணக்கு | 32,242 | |
| ரிபோ பற்றுச்சீட்டுகளுக்கான வட்டி கணக்கு | | 453,384 |
| பணியாளர் கொடுப்பனவுக் கணக்கு | 706,982 | |
| உரித்து பதிவு செய்தல் வருமானக் கணக்கு | | 49,355,340 |
| திறைசேரி பற்றுச்சீட்டுக்களுக்கான வட்டிக் கணக்கு | | 80,284 |
| திறைசேரி பிணைமுறிகளுக்கான வட்டிக் கணக்கு | | 34,058,055 |
| மொத்த நிதி கணக்கு | | 241,102,118 |
| கணக்காய்வு கட்டண ஒதுக்கீட்டு கணக்கு | | 400,000 |
| வங்கி மீதி | 4,112,992 | |
| ஆரம்ப ஏல மனுக் கட்டண கணக்கு | 80,000 | |
| செலுத்த வேண்டிய வருமான வரிக் கணக்கு | | 1,161,335 |
| திறைசேரி பிணைமுறி மிகை கணக்கு | | 237,691 |
| உரித்து பதிவாளர் கணக்கிலிருந்து கிடைக்க வேண்டிய கட்டணக் கணக்கு | 4,665 | |
| | **326,848,206** | **326,848,206** |

ஆர்.டீ.கே.வெலிவிட்டகே
பிரதான கணக்காளர்
பதிவாளர் நாயகம் திணைக்களம

ආර්.ටී.කේ. වැලිවිටගේ
ප්‍රධාන ගණකාධිකාරී
රෙජිස්ට්‍රාර් ජනරාල් දෙපාර්තමේන්තුව
ශොයිස්වත්ත, බත්තරමුල්ල.

## 3.1.7 நிதிக்கூற்றுக்கள் பற்றிய குறிப்புகள்

குறிப்புகள்

நிதிக்கூற்றுக்கள் பற்றிய குறிப்புகள்

**01. நிறுவன விபரம்**

உரித்து பதிவிற்காக பாதுகாப்பு வலையமைப்பினை வழங்குவதற்கும் இழப்பீட்டிற்கு அல்லது நட்டத்திற்கு முகங்கொடுக்கின்ற நபர்களுக்கு நீதிமன்றத்தினால் பிரப்பிக்கப்படுகின்ற கட்டளைக்கமைய நஷ்டஈடு செலுத்துவதை குறிக்கோளாக கொண்டு 1998 ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க உரித்து பதிவு செய்தல் அதிகாரச் சட்டத்தின் 67ஆம் பிரிவிற்கு 2009 ஆகஸ்ட் 21ஆம் திகதி கொண்டுவரப்பட்ட திருத்தங்களுக்கமைய இந் நிதியம் செயற்படுகின்றது. உரித்து காப்புறுதி நிதிய அலுவலகம் இலக்கம் 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை எனும் முகவரியில் அமைந்துள்ளது.

**02. தயாரித்தல் தொடர்பான கோட்பாடுகள்**

1998 ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க உரித்து பதிவு செய்தல் அதிகாரச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய கணக்கு கூற்றுகள் தயார் செய்யப்பட்டுள்ளது.

